6.2.16

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் 11ம் தேதிக்கு ஒத்திவைப்பு

திருப்பூர்,: திருப்பூர் கோட்டத்தில் அமைந்துள்ள திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, பல்லடம், ஊத்துக்குளி மற்றும் அவினாசி தாலுகாவில் உள்ள விவசாயிகளின் குறைகள் தொடர்பான மனுக்கள் பெற்று தீர்வு காணும் வகையில் மாதந்தோறும் கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுவது வழக்கம். அதன்படி திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் திருப்பூர் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில், ஆர்.டி.ஓ. முருகேசன் தலைமையில் நேற்று (4ம் தேதி) காலை 11 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. விவசாயிகள் சிலர் வந்திருந்த நிலையில், கூட்டம் வரும் 11ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து விவசாயிகள் திரும்பி சென்றனர். இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், முக்கிய அலுவல் காரணமாக கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், வருகிற 11ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றனர்.

## உளுந்து, துவரை பயிர்களை அதிகம் சாகுபடி செய்ய வேண்டும்

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரம் ஊமத்தநாடு மற்றும் பள்ளத்தூர் ஆகிய கிராமங்களில் விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி தஞ்சை மாவட்ட துணை வேளாண்மை இயக்குநர் இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வரவேற்று பேசும்போது, தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல்வயல் வரப்புகளில் பயறுவகை பயிர்கள் சாகுபடி

செய்யும் விவசாயிகளுக்கு 1 ஹெக்டேருக்கு 3 முதல் 4 கிலோ வரை சான்று பெற்ற உளுந்து விதை 100 ரூபாய் மானியத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. விதை கிராமத்திட்டத்தின் கீழ் 1 கிலோ விதைக்கு 25 ரூபாய் மானியமும் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் பயறு திட்டத்தின் கீழ் 15 ஆண்டுகளுக்கு உட்பட்ட பயறு ரகங்களுக்கு 25 ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது.புறதச்சத்து பற்றாக்குறையை போக்கிட உளுந்து, துவரை போன்ற பயறு வகைப் பயிர்களை அதிக பரப்பில் சாகுபடி செய்திட வேண்டும் எனவும், உளுந்து தட்டைபயறு ஆகிய பயிர்கள் மண்ணுக்கு நல்ல அங்கக உரமாகவும் கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாகவும் பயன்படுத்தலாம் என்றார். மாவட்ட துணை வேளாண்மை இயக்குநர் இளஞ்செழியன் பேசுகையில், மண்வளத்தை பாதுகாத்திட தொழு உரங்களையும் சணப்பு, தக்கைப்பூண்டு, அகத்தி போன்ற பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் எனவும், பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும்போது சுற்றுசூழலுக்கு பங்கம் விளைவிக்காத வகையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுக்கிட சிங்கடிக் பைரிக்ராய்ட்ஸ் போன்ற மருந்துகளை பயன்படுத்தும்போது நன்மை செய்யும் பூச்சிகள் அழிந்து, தீமை செய்யும் பூச்சிகளில் எதிர்ப்பு சக்தி தோன்றி கட்டுப்படுக்கிட முடியாத அளவிற்கு பெருகிவிடும் என்றார். வேளாண்மை அலுவலர் சாந்தி பேசும்போது பயறு வகை பயிர்கள் விதைப்பு செய்வதற்கு முன் ரைசோப்பியம் மற்றும் டிரைக்கோடர்மா விருடி எனும் எதிர் உயிர் பூசனத்தை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து விதைத்திட வேண்டும். பூக்கும் தருணத்தில் 15 நாள் இடைவெளியில் இரண்டு முறை 2 சத டிஏபி கரைசலை தெளித்தால் காயாக மாறி பொக்கற்ற சுருக்கமற்ற திரட்சியான மகசூல் பெறலாம் என்றார். அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் முருகானந்தம், உதவி திட்ட மேலாளர்கள் ராஜீ, அய்யாமணி, உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலசுந்தர், நாடிமுத்து ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## அரியலூர் மாவட்டத்தில் சொட்டுநீர் பாசன சிறப்பு முகாம்

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் சொட்டுநீர் பாசனத்திற்கான விவசாயிகள் சேர்க்கைக்கான சிறப்பு முகாம் நடைபெறுகிறது. நீர்த்தேவை அதிகரித்து வரும் நிலையிலும், நீர்வளம் குறைந்து வரும் நிலையிலும் சிக்கனமாக நீரைப் பயன்படுத்தி வருங்காலத் தலைமுறைக்கு வளமான நீர்வளத்தை விட்டுச்செல்லவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இந்நிலையில் விவசாயத்தில் சிக்கனமாக நீரை செலவு செய்து இருமடங்கு உற்பத்தியும், மும்மடங்கு வருமானமும் பெற தோட்டக்கலைத்துறை மூலம் காய்கறி பயிர்கள், மலர்கள், பழப் பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு சொட்டுநீர்ப்பாசனம் அமைத்து தரப்படுகிறது. சொட்டுநீர்ப்பாசனம் அமைப்பதன் மூலம் குறைந்த நீரைக் கொண்டு அதிகப்பரப்பில் பயிர் செய்யலாம். 75% நீரை சேமிக்கலாம். குறைந்த செலவில் அதிக லாபம் கிடைக்கும். பயிர் திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளர்வதோடு வேகமாக முதிர்ச்சியடையும். தண்ணீரில் கரையும் உரங்களை நேரடியாக பயிருக்கு வேர்ப் பகுதியிலேயே வழங்கலாம். களை எடுக்கும் செலவு குறைவு. தரமான விளை பொருள்களுடன் அதிக விளைச்சல் கிடைக்கும். சொட்டுநீர்ப்பாசன திட்டத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு அவர்தம் நிலங்களில் சொட்டுநீர் அமைக்க 100% சதவிகித மானியமும் இதர விவசாயிகளுக்கு 75% மானியத்தில் 12.5 ஏக்கர் வரையும் வழங்கப்படுகிறது. தோட்டக்கலைத்துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்த தோட்டக்கலை பயிர்களுக்கு 325 எக்டர் பொருள் இலக்கும், ரூ.223 லட்சங்கள் நிதி இலக்கும், வேளாண பயிர்களுக்கு 108 எக்டர் பொருள் இலக்கும், ரூ.74.63 லட்சங்கள் நிதி இலக்கும் பெறப்பட்டுள்ளன.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகள் இத்திட்டத்தில் பயன்பெறும் பொருட்டு அவர்களுக்கு மட்டும் ரூ.100 லட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் சொட்டுநீர்ப்பாசன திட்டத்தினை விவசாயிகளின் மத்தியில் விரைவாக கொண்டு செல்லும் பொருட்டு அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், திருமானூர், தா.பழூர், செந்துறை, ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் நேற்று முதல் 7ம் தேதி வரை சொட்டுநீர் பாசன திட்டம் தேவைப்படும் விவசாயிகளின் விவரங்களை சேகரிக்கும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. எனவே சொட்டுநீர் பாசன அமைப்பு தேவைப்படும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் கணினிசிட்டா, அடங்கல், நிலவரைபடம், குடும்ப அட்டை நகல், சிறுஃகுறு விவசாயி சான்று, 2 எண்கள் புகைப்படத்துடன் சம்மந்தப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் நடைபெறும் இச்சிறப்பு முகாமினை பயன்படுத்தி தங்களது பெயரை பதிவு செய்து பயன்பெறுமாறு கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அறுவடை பணி துவங்கியதால் வெங்காயம் விலை குறைந்தது

பெரம்பலூர், : வெளிமாவட்டங்களில் அறுவடை துவங்கியதால் பெரம்பலூரில் சின்ன வெங்காயம் விலை குறைந்தது. பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் சின்ன வெங்காயம் 20,056 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த 8 ஆண்டுகளில் சின்ன வெங்காயத்தின் சாகுபடி பரப்பு அதிரடியாக குறைந்து 13,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டபோதும் தமிழக அளவில் தொடர்ந்து சின்ன வெங்காய சாகுபடியில் பெரம்பலூர் மாவட்டம் முதலிடத்தை பெற்றுவருகிறது.

அழுகிவிடும் குறுகியகால பணப்பயிரான சின்ன வெங்காயத்தை பட்டறை அமைத்து பாதுகாக்கும் தொழில்நுட்பத்தை அந்த காலத்தில் இருந்தே விவசாயிகள் கடைபிடித்து வருவதாலும், கிணற்று பாசனத்தை நம்பியிருப்பதாலும் இப்பகுதியில் சின்ன வெங்காயம் குறிப்பிடத்தக்க அளவுக்கு தொடர்ந்து சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கோயம்பேட்டில் கிலோ ரூ.40க்கு விற்றபோது பெரம்பலூர் மாவட்டத்தில் அடிமாட்டு விலையாக கிலோ ரூ.4க்கு பெறப்பட்டபோது தான் மாவட்ட நிர்வாகம், சின்ன வெங்காயத்துக்கான ஏலத்தை செட்டிக்குளத்தில் துவங்கியது.

கடந்த நவம்பர், டிசம்பர் மாதம் பெய்த தொடர்மழை காரணமாக 14,000 விவசாயிகளால் 20,056 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்திருந்த சின்ன வெங்காயத்தில் 17,500 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்தது கடுமையாக பாதிக்கப்பட்டது. சின்ன வெங்காயம் 88 சதவீதத்துக்கு பாதிக்கப்பட்டதாலும், கிறிஸ்துமஸ், ஆங்கில புத்தாண்டு, பொங்கல் பண்டிகையென அடுத்தடுத்து பண்டிகைகள் படையெடுத்து வந்ததால் சின்ன வெங்காயம் விற்பனையில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருந்தது.

எனவே பெரம்பலூர் உழவர் சந்தையிலேயே கிலோ ரூ.50க்கு விற்கப்பட்டது. இது மார்க்கெட்டில் ரூ.60க்கு மேலும், கிராமப்புறங்களில் கிலோ ரூ.80க்கும் விற்கப்பட்டது. இதனால் ஆம்லெட்டுக்கு முட்டைக்கோசையும், பச்சடிக்கு வெள்ளரிக்காயையுமே ஓட்டல்கள் பயன்படுத்தின. இந்நிலையில் நெல்லை மாவட்டம் விளாத்திக்குளம், சேலம் மாவட்டம் ராசிபுரம், மதுரை மாவட்டம், ராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதிகளில் அறுவடை செய்யப்படும் வெங்காயம் திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், திருச்சி காந்தி மார்க்கெட் வழியாக பெரம்பலூரில் விற்பனைக்காக குவிக்கப்படுகிறது.

இதனால் பெரம்பலூரில் சின்ன வெங்காயத்தின் விலை குறைந்து வருகிறது. குறிப்பாக விளாத்திக்குளத்தில் மொத்த விற்பனைக்கே கிலோ ரூ.10க்கும், ரூ.12க்கும் விற்கப்படுவதால், பெரம்பலூர் உழவர்சந்தையில் நன்கு விளைந்த சின்ன வெங்காயம் கிலோ ரூ.17க்கு விற்கப்படுகிறது. மழையால் விளைச்சல் பாதிக்கப்பட்டு விற்பனைக்கு வருகிற சின்ன வெங்காயம் கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரைக்கும் விற்கப்படுகிறது. பெல்லாரி எனப்படும் பெரிய வெங்காயமும் 50 கிலோ மூட்டை ரூ.1,100க்கும், கிலோ ரூ.30க்கும் விற்கப்படுகிறது. இது முன்பு கிலோ ரூ.60க்கும், வெளியிடங்களில் ரூ.80க்கும் விற்கப்பட்டது.

## தென்னையை தாக்கும் சிவப்பு கூன் வண்டுகளை கட்டுப்படுத்துவது எப்படி?

கறம்பக்குடி, : தென்னையில் தாக்கும் சிவப்பு கூன் வண்டுகளை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டாரத்தில் தென்னை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், தென்னையை தாக்கும் சிவப்பு கூன் வண்டுகளை கட்டுப்படுத்தி, விளைச்சலைப் பெருக்க மானிய விலையில் வழங்கப்படும் இன கவர்ச்சி பொறி வாங்கி பயன்படுத்துமாறு கறம்பக்குடி வட்டார வேளாண் உதவி இயக்குநர் மனோகரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில்கூறியிருப்பதாவது:

தென்னையைத் தாக்கும் பூச்சிகளான சிவப்பு கூன் வண்டு மற்றும் காண்டாமிருக வண்டு ஆகியன மரங்களின் மகசூலில் கனிஷமான இழப்பை ஏற்படுத்தி வருகின்றன. இதில் சிவப்பு கூன் வண்டால் தாக்கப்பட்ட தென்னை மரங்களின் தண்டு மற்றும் அடிப்பாகத்தில் துளைகள் காணப்படும். துளைகள் மூலம் வண்டுகள் தின்று வெளியேற்றிய நார் கழிவுகள் காணப்படும் துளைகளில் இருந்து செம்பழுப்பு நிற திரவம் வடிந்து கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட மரத்தை கட்டினால் ஓசை கேட்கும் அளவுக்கு அறிகுறிகள் தென்பட்டால் தென்னை மரங்களை சிவப்பு கூன் வண்டுகள் தாக்கியுள்ளதை தெரிந்துகொள்ளாம். இவற்றைக் கட்டுப்படுத்த தென்னந்தோப்புகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். மரங்களின் நுனிப் பகுதியை தேவையான இடைவெளியில் சுத்தப்படுத்த வேண்டும். மேலும் பச்சை மட்டைகள் வெட்டுவதைத் தவிர்க்க வெண்டும். இதைத் தவிர பெரோலூர் எனப்படும் இன கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு 2 வீதம் தென்னந்தோப்புகளில் வைத்து சிவப்பு கூன் வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம் என்றார். இவ்வாறு அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தென்னை விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

## உளுந்து, துவரை பயிர்களை வயலில் அதிகம் சாகுபடி செய்ய வேண்டும்

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரம் ஊமத்தநாடு மற்றும் பள்ளத்தூர் ஆகிய கிராமங்களில் விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி தஞ்சை மாவட்ட துணை வேளாண்மை இயக்குநர் இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வரவேற்று பேசும்போது, தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல்வயல் வரப்புகளில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 1 ஹெக்டேருக்கு 3 முதல் 4 கிலோ வரை சான்று பெற்ற உளுந்து விதை 100 ரூபாய் மானியத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. விதை கிராமத்திட்டத்தின் கீழ் 1 கிலோ விதைக்கு 25 ரூபாய் மானியமும் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் பயறு திட்டத்தின் கீழ் 15 ஆண்டுகளுக்கு உட்பட்ட பயறு ரகங்களுக்கு 25 ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது.புறதச்சத்து பற்றாக்குறையை போக்கிட உளுந்து, துவரை போன்ற பயறு வகைப் பயிர்களை அதிக பரப்பில் சாகுபடி செய்திட வேண்டும் எனவும், உளுந்து தட்டைபயறு ஆகிய பயிர்கள் மண்ணுக்கு நல்ல அங்கக உரமாகவும் கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாகவும் பயன்படுத்தலாம் என்றார். மாவட்ட துணை வேளாண்மை இயக்குநர் இளஞ்செழியன் பேசுகையில், மண்வளத்தை பாதுகாத்திட தொழு உரங்களையும் சணப்பு, தக்கைப்பூண்டு, அகத்தி போன்ற பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் எனவும், பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும்போது சுற்றுசூழலுக்கு பங்கம் விளைவிக்காத வகையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்திட சிந்தடிக் பைரித்ராய்ட்ஸ் போன்ற மருந்துகளை பயன்படுத்தும்போது நன்மை செய்யும் பூச்சிகள் அழிந்து, தீமை செய்யும் பூச்சிகளில் எதிர்ப்பு சக்தி தோன்றி கட்டுப்படுத்திட முடியாத அளவிற்கு பெருகிவிடும் என்றார். வேளாண்மை அலுவலர் சாந்தி பேசும்போது பயறு வகை பயிர்கள் விதைப்பு செய்வதற்கு முன் ரைசோப்பியம் மற்றும் டிரைக்கோடர்மா விருடி எனும் எதிர் உயிர் பூசனத்தை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து விதைத்திட வேண்டும். பூக்கும் தருணத்தில் 15 நாள் இடைவெளியில்

இரண்டு முறை 2 சத டிஏபி கரைசலை தெளித்தால் காயாக மாறி பொக்கற்ற சுருக்கமற்ற திரட்சியான மகசூல் பெறலாம் என்றார். அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் முருகானந்தம், உதவி திட்ட மேலாளர்கள் ராஜீ, அய்யாமணி, உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலசுந்தர், நாடிமுத்து ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## 17வது மலர், காய்கனி கண்காட்சி துவக்கம்

காரைக்கால், : காரைக்காலில் 17வது மலர், காய் மற்றும் கனி கண்காட்சி துவங்கியது. காரைக்கால் நகராட்சி திடலில் மாவட்ட வேளாண்துறை சார்பில் 17வது மலர், காய் மற்றும் கனி கண்காட்சி நேற்று இரவு துவங்கியது. கண்காட்சியை புதுச்சேரி வேளாண் அமைச்சர் சந்திரகாசு துவக்கி வைத்தார். புதுச்சேரி மீன்வளத்துறை அமைச்சர் சிவா, எம்எல்ஏ நாஜிம், கலெக்டர் வல்லவன் ஆகியோர் வாழ்த்தினர். மாவட்ட கூடுதல் வேளாண்துறை இயக்குனர் மதியழகன் வரவேற்றார். விழாவில் வாரிய தலைவர்கள் கோவிந்தராஜ், உதயகுமார், மாவட்ட வணிகர்கள் சங்க தலைவர் அமுதா ஆறுமுகம் மற்றும் பலர் பங்கேற்றனர். இணை வேளாண் இயக்குநர் ராஜேந்திரன் நன்றி கூறினார். இந்த கண்காட்சி வரும் 7ம் தேதி வரை நடக்கிறது. கண்காட்சிக்காக புதுச்சேரி அரசு ரூ.25 லட்சம், தனியார் துறை பங்களிப்பு ரூ.5 லட்சம் என மொத்தம் ரூ.30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியில் பெங்களூரு, புனே, ஐதராபாத், ஊட்டி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வண்ண, வண்ண மலர்கள், அங்காரம் மற்றும் காய்கறி செடிகள், பழங்கள் வரவழைக்கப்பட்டுள்ளது. கண்காட்சியில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரயில், காளாண் குடை, அழகிய பெண் பொம்மை, மாட்டுவண்டி, நீரோடை, வண்ணத்துப்பூச்சி, மீன் உள்ளிட்டவைகளை மக்கள் ரசித்து பார்வையிட்டர். விழாவின் இறுதி நாளான நாளை பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்படவுள்ளது.

## சிறுதானிய உணவுகளை உபயோகிக்க வேண்டும்

திருவாரூர், : சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் சிறுதானிய உணவுகளை பொதுமக்கள் உபயோகிக்க வேண்டும் என்று மாநில திட்டக்குழு துணைத்தலைவர் சாந்தஷீலா நாயர் தெரிவித்துள்ளார். திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் விஸ்வநாதபுரம் கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்தல் மற்றும் சிறுதானியங்களை மதிப்பு கூட்டல் செய்தல் தொடர்பான வயல் தினவிழா நடந்தது. கலெக்டர் மதிவாணன் தலைமை வகித்தார். மாநில திட்டக்குழு துணைத்தலைவர் சாந்த ஷீலா நாயர் பேசியதாவது: திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மற்றும் பல்வேறு துறைகளுக்கு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியிலிருந்து கொரடாச்சேரி வட்டாரத்தில் சிறுதானியம் உற்பத்தி மற்றும் மதிப்புகூட்டல் செயல்படுத்த ரூ.16.15 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்து வருகிறது. இத்திட்டத்தில் குதிரைவாலி சிறுதானியத்தை உற்பத்தி செய்வதற்கு 20 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 20 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் குதிரைவாலி சிறு தானியமானது வறட்சியை தாங்கி வளரும் பயிராகும் என்பதால் உற்பத்தி செய்வதற்கு குறைவான தண்ணீரே போதுமானதாகும். மேலும் இத்திட்டத்தின் மூலம் சிறுதானியங்களை மதிப்பு கூட்டுவதற்கு தேவையான கருவிகளும் வழங்கப்பட்டு அவற்றை பிஸ்கட் மற்றும் இதர மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்ய இருப்பதால் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். மேலும் சிறுதானிய உணவுகள் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது. எனவே பொதுமக்கள் அதனை பயன்படுத்த வேண்டும் என்றார். மாநில திட்டக்குழு (வேளாண்மை) குழும தலைவர் ஜெகன்மோகன், வேளாண் இணை இயக்குனர் மயில்வாகணன் பங்ேகற்றனர்.

## 2,519 விவசாயிகளுக்கு ரூ.2.19 கோடி நிவாரண உதவி

நாகை, : நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் புத்தகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி கூட்டுறவு வங்கி தலைவர் வெங்கட்ராமன் தலைமையில் நேற்று நடந்தது. துணைத்தலைவர் ராமதாஸ் முன்னிலை வகித்தார். வங்கி செயலாளர் திரிசங்கு வரவேற்றார். விவசாயிகளுக்கு நிவாரண தொகையை கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ஆசைமணி வழங்கினார். நிகழ்ச்சியில் 1,474 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 26 லட்சத்து 45 ஆயிரத்து 450வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஒன்றியக்குழு தலைவர் மைதிலி, ஊராட்சி தலைவர் ராஜகுமாரி, கிராம நிர்வாக அலுவலர் முருகலெட்சுமிபங்கேற்றனர்.

திருப்புகலூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கும் விழா நடந்தது. கூட்டுறவு சங்க தலைவர் தங்க கணேசன் தலைமை வகித்தார். வங்கி செயலாளர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத்தொகையை கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ஆசைமணி வழங்கினார். நிகழ்ச்சியில் 1045 விவசாயிகளுக்கு ரூ.93,37,882 வழங்கப்பட்டது. திருமருகல் ஒன்றியத்தில் இதுவரை 2,519 விவசாயிகளுக்கு ரூ.2 கோடியே 19 லட்சத்து 83 ஆயிரத்து 332 நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி

திண்டுக்கல், : சாணார்பட்டி சட்டக்காரன்பட்டியில் விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் இளங்கோவன் தலைமை வகித்து பேசுகையில், குறைந்த செலவில் அதிகலாபம் கிடைக்க பயறுவகை பயிர்களை பயிரிடலாம். மண்பரிசோதனை முடிவுப்படி உரமிட்டால் உரச்செலவை குறைத்து

உற்பத்தியைஅதிகரிக்கலாம்என்றார்.

திண்டுக்கல் வேளாண்மை அலுவலர் போது, சாணார்பட்டி வேளாண்மை அலுவலர் ராம்ராஜ், அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் தமிழரசு, சேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் சுகன்யா நன்றி கூறினார்.

## கம்பம் பகுதியில் தென்னை வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்

கம்பம், : கம்பம் பகுதியில் இளநீர் கொள்முதல் செய்வது அதிகரித்து வருவதால் தென்னை விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தேனி மாவட்டம் கம்பம், கூடலூர், காமயகவுண்டன்பட்டி, உத்தமபாளையம், சின்னமனூர் உள்ளிட்ட பகுதிகளில் திராட்சை, வாழைக்கு அடுத்தபடியாக நூற்றுக்கணக்கான ஏக்கரில் தென்னை விவசாயம் நடந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக தென்னை மரங்களில் ஏற்பட்ட நோய் தாக்குதல் காரணமாக பெரும்பாலான விவசாயிகள் தென்னை மரங்களை அழித்து மாற்று விவசாயத்தில் ஈடுபட்டனர். இளநீருக்கு நல்ல விலை கிடைப்பதால் தற்போது இப்பகுதிகளில் விவசாயிகள் தென்னை சாகுபடி செய்து வருகின்றனர். இங்கிருந்து பறிக்கப்படும் இளநீர் காய்கள் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் உள்ளூரை சேர்ந்த சில்லரை வியாபாரிகளும் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறுகையில், ‘கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு நடவு செய்யப்பட்ட தென்னை மரங்கள் நோய் தாக்குதல் காரணமாக சமீப காலமாக படிப்படியாக அழிந்து வருகிறது. இருப்பினும் தற்போது இங்கு விளையும் இளநீரை சென்னையை சேர்ந்த மொத்த வியாபாரிகள் அதிகளவில் வந்து வாங்கி செல்கின்றனர். இதனால் இப்பகுதி விவசாயிகள் மீண்டும் தென்னை கன்றுகளை நடவு செய்து வருகிறோம்’ என்றனர்.

## உத்தமபாளையம் பகுதிகளில் விவசாயிகளுக்கு பவர் ஸ்பிரே

உத்தமபாளையம், : உத்தமபாளையத்தில் விவசாயிகளுக்கு பவர் ஸ்பிரே விநியோகம் செய்யப்பட்டது. உத்தமபாளையம் வட்டாரத்தில் தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகமான அளவில் பயிர் விவசாயம் நடக்கிறது. தேசிய உணவு பாதுகாப்பு குழுமம் திட்டத்தின் சார்பில் 50 சதவீத மானியத்தில் பவர் ஸ்பிரே வழங்கும் நிகழ்ச்சி வேளாண்மை உதவி இயக்குநர் ராஜ்மனோகரன் தலைமையில் நடந்தது. யூனியன் சேர்மன் தீபாவளிராஜ் 8 பவர் ஸ்பிரேயர்களை விவசாயிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் வேளா ண்மை அதிகாரிகள் சின்னவெளியப்பன், மணிகண்டன், பால்முத்து, குமரேசன், மோகன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## கம்பம் பகுதியில் கர்நாடகா மொச்சை வரத்தால் உள்ளூர் மொச்சை விலை சரிவு

கம்பம், : கம்பம் மலையடிவார பகுதிகளில் மொச்சைக்காய் அதிகமான ஏக்கர் பரப்பில் விவசாயம் செய்யப்படுகிறது. இங்கு விளையும் மொச்சைக்காய் பறிக்கப்பட்டு தேனி, மதுரை, சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதுண்டு. மொச்சை விளைச்சல் அதிகமானஅளவில் உள்ளதால் இதன் விலையில் சறுக்கல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த 2 மாதத்திற்கு முன்பு 1 கிலோ ரூ.20 முதல் ரூ.40 வரை விற்பனையானது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் இருந்தனர். ஆனால் தற்போதோ விலை சரியத்தொடங்கி உள்ளது. காரணம் கர்நாடகா மாநிலம் மைசூரில் இருந்து அதிகளவில் மொச்சைக்காய் வரத்து தொடங்கி உள்ளது. தற்போது விலை 1 கிலோ ரூ.13 என்ற அளவில் சரிந்துள்ளது. விலை சரிவால் விவசாயிகள் தற்போது தோட்டத்திலேயே மொச்சை காய்களை பறிக்காமல் விட்டுள்ளனர். இதனை மொச்சைபயிராக மாறும்போது விலை அதிகளவில் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். விவசாயி மனோகரன் கூறுகையில், கர்நாடகாவில் அதிகளவில் மொச்சை விளைச்சல் ஏற்பட்டு தேனி மாவட்டத்திற்கு வந்துள்ளதால் இதன் விலை

குறைந்துள்ளது. இதனால் விவசாய கூலி தொழிலாளர்களுக்கு பறிக்கும் கூலியை கூட கொடுக்க முடியாதநிலை உள்ளது என்றனர்.

## இளையான்குடி பகுதியில் புளி விளைச்சல் அமோகம்

இளையான்குடி, : இளையான்குடி பகுதியில் கடந்த ஆண்டைவிட தற்போது புளி விளைச்சல் அதிகமாகியுள்ளது. இளையான்குடியில் கடந்த ஆண்டு ஒரு கிலோ சுத்தமான புளி 100லிருந்து 130 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது புளி விளைச்சல் அதிகமாகியுள்ளதால் ஒரு கிலோ சுத்தமான பழைய புளி 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமங்களிலிருந்து அறுவடை செய்தபின், கடைகளுக்கு புளி வரத்து வரத்தொடங்கினால் கிலோ சுத்தமான புளி ரூ. 80 வரை விலை சரிந்து விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## உரம், பூச்சி மருந்து விற்பனையாளருக்கு எச்சரிக்கை!கல்வித்தகுதி இருந்தால் மட்டுமே உரிமம்

காஞ்சிபுரம்:உரக்கட்டுப்பாடு, பூச்சிக் கொல்லி மருந்து விதிமுறை சட்டங்களில் செய்யப்பட்டுள்ள திருத்தத்தால், புதிய விற்பனையாளர்கள், உரிய கல்வித்தகுதி இருந்தால் மட்டுமே, உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளை விற்பனை செய்ய உரிமம் பெற முடியும் என, உரக்கட்டுப்பாடு வேளாண் உதவி இயக்குனர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு அக்., 10ம் தேதி, உரக்கட்டுப்பாடு சட்டத்திலும்; நவ., 5ம் தேதி, பூச்சிக்கொல்லி மருந்து விதிமுறைகள் சட்டத்திலும் மத்திய அரசு திருத்தம் கொண்டு வந்தது.

அதில், ஏற்கனவே உரம், பூச்சி மருந்து கடைக்கு உரிமம் பெற்றவர்களுக்கு, கல்வித்தகுதி சம்பந்தமாக எந்தவித நிபந்தனையும் இல்லை.

சட்ட திருத்தம்:புதிதாக உரம், பூச்சி மருந்து கடை வைப்பவர்கள், உரிய கல்வித் தகுதி இருந்தால் மட்டுமே, உரிமம் பெற முடியும் என, கூறப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், 234 உரம், பூச்சி மருந்து சில்லறை விற்பனை கடைகளும்; 42 மொத்த விற்பனை கடைகளும் உள்ளன. அந்த கடைகளின் உரிமையாளர்களுக்கு, சட்டத்திருத்தம் பற்றிய விழிப்புணர்வு முகாம், நேற்று முன்தினம், மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில், காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சீத்தாராமன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் விற்பனையாளர்கள் :நுாற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அதில், விற்பனையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்ட சட்ட திருத்தம் குறித்த தகவல்கள்:

உர விற்பனையாளர்களுக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் மூலம், இளம் அறிவியல் பட்டப்படிப்பு அல்லது இளம் வேதியியல் பட்டப்படிப்பு, அல்லது வேளாண் அறிவியல் பட்டயப்படிப்பு அல்லது வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனம் மற்றும் தேசிய பயிர் பாதுகாப்பு நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ் பெற்றிருத்தல்.

அதேபோல், பூச்சிக் கொல்லி மருந்து விற்பனையாளர்களுக்கு, இளம் அறிவியல் பட்டப்படிப்பு அல்லது உயிர் வேதியியல் அல்லது உயிர் தொழில்நுட்பவியல் அல்லது

வாழ்வறிவியல் அல்லது இளம் வேதியியல் அல்லது தாவரவியல் அல்லது

விலங்கியல் பட்டப்பட்டிப்பு முடித்திருக்க வேண்டும்.

பூச்சிக்கொல்லி மருந்து கடையை ஏற்கனவே வைத்திருப்பவர்கள், உரிய கல்வித்தகுதி பெற்ற நபர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும்.

ஏற்கனவே, கடை வைத்திருப்பவர்களின் உரிமம், காலாவதியாவதற்கு ஓரிரு மாதத்திற்குள், உரிமத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

பாதகம் இல்லை:உரக்கட்டுப்பாடு வேளாண் உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறியதாவது:

இந்த சட்ட திருத்தத்தில், ஏற்கனவே கடை வைத்திருப்பவர்களுக்கு எந்தவித பாதகமும் இல்லை. ஏற்கனவே பூச்சி மருந்து கடை வைத்திருப்பவர்கள், தங்கள் கடையில், உரிய கல்வித்தகுதி பெற்றவர்களை பணிக்கு அமர்த்த வேண்டும். எம்.எப்.எம்.எஸ்., எனப்படும்

அப்ளிகேஷன் மூலம், விற்பனை விவரத்தை கடை உரிமையாளர்கள், பதிவு செய்வதே இல்லை. அவ்வாறு பதிவு செய்யவில்லை என்றால், கடையின் உரிமம் ரத்து செய்யப்படும்.

விற்பனை விவரம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் பெரும்பாலான கடைகளில், கடந்த ஆண்டு அக்., மாதத்திலிருந்து முறையாக கிடைக்கவில்லை. விற்பனை, இருப்பு விவரத்தை முறையாக, அந்தந்த வேளாண் அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும். மேலும், அப்ளிகேஷனை பயன்படுத்தி, தகவல்களை செலுத்த வேண்டும். இல்லையெனில், உரிமம் ரத்தாகும்.

இந்த சட்ட திருத்தம், முற்றிலும் புதிய விற்பனையாளர்களுக்கே பல்வேறு விதிமுறைகளை வகுத்துள்ளது. ஏற்கனவே, உள்ள கடை விற்பனையாளர்களை எந்த வகையிலும் பாதிக்கவில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## நெல் கொள்முதல் நேரடி நிலையம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி கலெக்டர் கதிரவன் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளது. இந்த, 9 மையங்களிலும் விற்பனை செய்யும் ஏ கிரேட் (சன்னரக நெல்) நெல் குவிண்டாலுக்கு, 1,520 ரூபாய், நெல்

பொது ரகம் குவிண்டாலுக்கு, 1,460 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீண்ட தூரம் சென்று நெல் ரகங்களை விற்பனை செய்யும் நிலை மாறி, மாவட்டத்திலேயே நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்தி நெல் ரகங்களை விற்பனை செய்து கொள்ளலாம்.

## இயற்கையை பாதுகாக்க மாணவர் சமுதாயம் முன்வர வேண்டும்

பந்தலூர்: 'மாணவ சமுதாயம் இயற்கையை பாதுகாக்க முன்வந்தால் மட்டுமே எதிர்கால சமுதாயம் வாழ இயலும்' என, தெரிவிக்கப்பட்டது.

பந்தலூர் அருகே அத்திக்குன்னா அரசு உயர்நிலைப் பள்ளி நிர்வாகம்; கூடலூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் ஆகியவை இணைந்து, உலக சதுப்பு நில பாதுகாப்பு தின விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தின.

பள்ளி ஆசிரியர் ரகுபதி வரவேற்றார். தலைமையாசிரியர்(பொ) பிரதீப் தலைமை வகித்து பேசுகையில்,“சதுப்பு நிலங்களை பாதுகாக்கும் வகையில் நடத்தப்படும் இந்த தினம் குறித்து மாணவர்கள், போதிய விழிப்புணர்வை பெற வேண்டும். அதனை மற்றவருக்கும் தெரிவிக்க வேண்டும்,”என்றார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய தலைவர் சிவசுபிரமணியம் பேசுகையில்,“பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் துவக்கப்பட்டு பசுமையை பாதுகாக்க, 16 வகையான தினங்கள் குறிப்பிடப்பட்டு, அந்த நாட்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகிறது. சதுப்பு நிலங்கள் குறித்து அறிந்து, அதனை பாதுகாக்க மாணவர்கள் முன் வர வேண்டும்,” என்றார்.

தேவாலா ஜி.டி.ஆர். பள்ளி தலைமையாசிரியர் சமுத்திரபாண்டியன் பேசுகையில்,“இயற்கையை அழிக்கும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்பாட்டை தவிர்க்கவும், உலக வெப்பமயமாதலை தடுக்கவும் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும்,”என்றார்.

ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் சத்தியநேசன் பேசுகையில், “மரங்கள்அழிவு, நச்சுப்புகை அதிகரிப்பு, வனங்கள் அழிப்பு இவற்றால் நிலம், நீர், காற்று பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில், இயற்கையை பாதுகாக்க, முழுமனதுடன் மாணவர்கள் முன்வரவேண்டும்,”என்றார்.

தொடர்ந்து, மருத்துவர் கணேசன், மைய ஆலோசகர் காளிமுத்து உள்ளிட்டோர் பேசினர். பல்வேறு போட்டிகளில் பங்கேற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆசிரியர் ராமானுஜம் நன்றி கூறினார்.

## நிலத்தடி நீர் மேலாண்மை ஆய்வு கட்டுரை மண்டல போட்டிக்கு தேர்வான மாணவர்களுக்கு பரிசு

கூடலூர்: சி.பி.ஆர்., சுற்றுச் சூழல் கல்வி மையம் மற்றும் 'விப்ரோ எர்தன்' அமைப்பு சார்பில், தென் மண்டல அளவில்,'நிலத்தடி நீர் மேலாண்மை, நிலைத்த பல்லுயிர் மேலாண்மை' குறித்து, ஆய்வு கட்டுரை போட்டிகள் நடந்தது. இதில், 10 மாவட்டங்களை சேர்ந்த, 25 பள்ளிகள் பங்கேற்று, ஆய்வு கட்டுரை சமர்ப் பித்தன.

இதில், கோத்தகிரி ரிவர்சைட் மெட்ரிக் பள்ளி, கூடலூர் மார்னிங் ஸ்டார் மேல்நிலைப் பள்ளி, கேரளா வயநாடு அசம்சன் மேல்நிலைப் பள்ளி, பாலக்காடு புனித ஆண்டனி மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் சமர்ப்பித்த ஆய்வு கட்டுரைகள் மண்டல போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டன.

இதற்கான, பரிசளிப்பு விழா, கூடலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்தது. பள்ளி தலைமை ஆசிரியர் ராபர்ட் வரவேற்றார். கூடலூர் மாவட்ட கல்வி அலுவலர் நடராஜன் தலைமை வகித்து பேசினார்.

கேரளா, வயநாடு மாவட்ட சுற்றுச்சுழல் ஆர்வலர்கள் தாமஸ்தேவாரா, சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மைய கள அலுவலர் குமர வேல் ஆகியோர்,'நிலத்தடி நீரை பாதுகாப்பதில், மாணவர்கள் பங்கு' குறித்து

விளக்கினார்.தொடர்ந்து, நான்கு பள்ளி மாணவர்களுக்கும், கட்டுரை தயாரிக்க வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

## வீணாகி வரும் மரங்கள் ஏலம் விட வருவாய்த்துறை முடிவு

குன்னூர் : பறிமுதல் செய்யப்பட்ட, மரத்துண்டுகளை ஏலம் விட்டு வருவாய் ஈட்ட, குன்னூர் வருவாய்த்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குன்னூர் சுற்றுவட்டாரத்தில், லாரி மூலம் கடத்தப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்ட மரத்துண்டுகள், குன்னூர் வருவாய் துறை அலுவலக வளாகத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.இந்த மரங்கள்,முட்புதர் சூழ்ந்து, வீணாகி வருகின்றன.இந்நிலையில், குன்னூர் வருவாய்த்துறையினர் மரங்களை ஏலம் விட ஆலோசித்துள்ளனர். குன்னூர் தாசில்தார் ஜான் மனோகர்ராஜ் கூறுகையில், “மரத்தை ஏலம் விட வனத் துறையிடம் ஆலோசித்துள்ளோம். மரத்துண்டுகளை அளவிட்டு, விரைவில் ஏலம் விடப்படும்,” என்றார்.

## சாமந்தி பூ சாகுபடி செய்ய ஆர்வம்

மயிலம்: மயிலம் பகுதியில் விவசாயிகள் சாமந்தி பூ சாகுபடி செய்ய மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மயிலம் ஒன்றியத்திலுள்ள விளங்கம்பாடி, தழுதாளி,மயிலம், முப்புளி, செண்டூர், வீடூர், கொணமங்கலம், வெளியனூர், தென்கொளப்பாக்கம், உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் தற்போது அதிக அளவில் மலர் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டிவருகின்றனர்.

மலர் சாகுபடிக்கு அதிக அளவு தணணீர் பாசனம் செய்ய தேவையில்லை, கிணற்றில் தற்போதுள்ள குறைந்த நீரை கொண்டு பயிரிடலாம். சாமந்தி பூச்செடிகளை அதிக அளவில் பூச்சிகள் தாக்குவதில்லை. இதனால் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு செலவு குறைகிறது.

சாமந்தி பூக்களுக்கான வீரிய விதைகள் விழுப்புரத்தில் விதை விற்பனை கடைகளில் கிடைக்கிறது. இவற்றை விவசாயிகள் வாங்கி வந்து நாற்றங்கால் தயாரிக்கின்றனர். பின்னர் நிலத்தை நன்றாக உழவு செய்து பாத்திகள் கட்டி சாமந்தி செடிகளை நடவு செய்கின்றனர். நடவு செய்த 22 நாட்களில் செடிகள் பூக்க ஆரம்பிக்கிறது.

விவசாயிகள் சாமந்திப் பூவை திண்டிவனம் பூ சந்தையில் விற்பனை செய்கின்றனர். பண்டிகை சீசன் மற்றும் விழாக் காலத்தில் கிலோ ரூபாய் 60 வரையில் விற்பனையாகிறது. சாதாரண நாட்களில் கூட நல்ல ரகமான பூ கிலோ ரூபாய் 40 முதல் விற்பனையாகிறது.

பூ வியபாரிகள் சாமந்தி பூவில் மாலைகள், காதம்பமாக கட்டி விற்பனை செய்கின்றனர். இதனால் மார்கெட்டில் சாமந்திக்கு நல்ல கிராக்கி உள்ளது. இந்த பூவை கோவில் திருவிழாக் காலங்களிலும், சுப முகூர்த்த தினத்திலும் வழக்கத்தை விட சற்று கூடுதல் விலை விவசாயிகளுக்கு கிடைக்கிறது. இதனால் போதுமான லாபம் கிடைக்கிறது. எனவே மயிலம் பகுதி விவசாயிகள் சாமந்தி பூ பயிரிட மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தோட்டக் கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு மலர் சாகுபடிக்கு தேவையான வேளாண்மை தொழில் நுட்பங்கள், விதைகள், பயிர்பாதுகாப்பு முறைகள், செட்டுநீர் பாசனம், , சந்தை வசதிகளை செய்து கொடுத்தால் இப்பகுதியில் விவசாயிகள் அதிக அளவில் மலர் செடிகளை பயிரிட வாய்ப்புக்கள் உள்ளது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## 15,000 சதுர மீட்டரில் பசுமை குடில் அமைக்க தோட்டக்கலைத்துறை இலக்கு

தேனி:மாவட்டத்தில் 15,000 சதுர மீட்டரில் பசுமை குடில் அமைத்து காய்கறி சாகுபடி செய்ய தோட்டக்கலை துறை இலக்கு நிர்ணயித்துள்ளது.மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர் அதிகம் சாகுபடியாகும். சாகுபடி முறைகளில் நோய் பாதிப்பு, மகசூல் அதிகரிப்பால் விலை குறைவு போன்ற சவால்களை விவசாயிகள் சந்தித்து வருகின்றனர். விவசாயிகள் ஆண்டு முழுவதும் காய்கறி சாகுபடி

செய்யும் நோக்கில் "இஸ்ரேல்' தொழில் நுட்ப பசுமைகுடில் சாகுபடி முறைகளை தோட்டக்கலை துறை அறிமுகம் செய்து வருகின்றது. தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மூலம் மாவட்டத்தில் 2015-2016ல் 15,000 சதுர மீட்டரில் பசுமை குடில் அமைக்க இலக்கு நிர்ணயித்துள்ளனர். ஒரு விவசாயிக்கு ஆயிரம் சதுர மீட்டர் முதல் 4 ஆயிரம் சதுர மீட்டர் வரையில் பசுமை குடில் 50 சதவீத மானியத்தில் அமைத்து தரப்படும். ஒரு பசுமை குடில் அமைத்தால் 15 ஆண்டுகள் பயன்தரும். மேற்கூரையினை மட்டும் 5 ஆண்டுக்கு ஒருமுறை மாற்றி தொடர்ந்து ஆண்டு முழுவதும் நவீன தொழில் நுட்பத்தில் காய்கறி சாகுபடி செய்யலாம். ஆயிரம் சதுர மீட்டரில் பசுமை குடில் அமைக்க ரூ.9.35 லட்சம் செலவாகும். இதில் 50 சதவீத மானியமாக அதாவது அரசு ரூ.4.67,500 வழங்குகிறது. இத் திட்டத்தில் 8 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பசுமை குடில் அமைத்து சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள தோட்டக்கலை அலுவலர்களை அணுகி விபரங்கள் பெறலாம் என தேனி தோட்டக்கலை துணை இயக்குனர் கிஷோர் குமார் தெரிவித்துள்ளார்.

## வைகை அணையில் பூத்துக்குலுங்கும் மாமரங்கள்

ஆண்டிபட்டி:வைகை அணையில் பூத்துக்குலுங்கும் மாமரங்கள் டெண்டர் எடுத்த விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. வைகை அணையில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான வலது கரை மற்றும் இடது கரை பகுதியில் 300க்கும் மேற்பட்ட மாமரங்கள் உள்ளன. அல்போன்சா, செந்தூரம், பங்கனப்பள்ளி, கல்லா வகை மாமரங்களின் மகசூல் பொதுப்பணித்துறை மூலம் ஒவ்வொரு ஆண்டும் டெண்டர் விடப்படும். கடந்தாண்டு மாமரங்கள் பூத்து காய் எடுக்கும் நிலையில் ஏற்பட்ட காற்று மற்றும் சாரல் மழையால் மகசூலில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. இந்தாண்டு அம்மரங்களில் அதிகப்படியான பூக்கள் பூத்துள்ளது. பூத்துக்குலுங்கும் மரங்களில் இன்னும் சில வாரங்களில் காய்க்கத்துவங்கி விடும். இது டெண்டர் எடுத்தவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்துவதாக உள்ளது. விவசாயிகள் கூறியதாவது: மாமரங்களில் பூக்கள் உதிர்வதை தவிர்க்கவும், பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தவும்

முன்கூட்டியே மருந்து தெளிக்க வேண்டும். கடந்தாண்டுகளைவிட இந்தாண்டு அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. இன்னும் சில வாரங்களில் மரங்களில் காய்கள் பறிக்கலாம், என்றனர்.

## நெல்லில் இலையுறை அழுகல் நோய்:கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி ஆலோசனை

கம்பம்:கம்பம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் இலையுறை அழுகல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்துவது குறித்து கம்பம் வேளாண் உதவி இயக்குனர் அசோகன் கூறியிருப்பதாவது :கம்பம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் பரவலாக இலையுறை நோய் தாக்குதல் காணப்படுகிறது. கதிர் வெளிவரும் தருணத்தில் கதிரை சுற்றி கண்ணாடி இலையில் மேல் கருஞ்சிவப்பு புள்ளிகள் தோன்றும். இதனால் இலையுறையை விட்டு கதிர்கள் வெளிவராது. நிறம் மாறி கதிர்கள் பதராக விடும். கண்ணாடி இலையுறை அழுகி காணப்படும். காற்று மற்றும் பூஞ்சாணம் மூலம் இந்நோய் பரவும்.கட்டுப்படுத்த சூடோமோனாஸ், புளோரோசன்ஸ் நுண்ணுயிரிடுதல் மூலம் கதிர் அழுகல் தீவிரத்தை 20 முதல் 40 சதவீதம் குறைக்கிறது. பயிர் வளர்ச்சியை தூண்டி மகசூலை அதிகரிக்கிறது. தாக்குதல் ஆரம்பநிலையில் இருக்கும் போது ஒரு டாங்க் தண்ணீரில் 5 மில்லி சூடோமோனாஸ், புளோராசன்ஸ் கலந்து இலைவழி தெளிப்பு மேற்கொள்வது நல்லது.5 சதம் வேப்பங்கொட்டை சாறு அல்லது 3 சதம் வேப்ப எண்ணெய் கரைசல் அல்லது 10 சதவீதம் வேலிகருவேல் இலைச் சாறு இவைகளில் ஏதேனும் ஒன்றை நோய் தோன்றும் தருணத்திலும் மீண்டும் 10 நாட்கள் இடைவெளியிலும் தெளிக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம் இலையுறை நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம், என்றார்.

**கண்மாய்களில் வளர்கிறது ஆகாயதாமரைகள்நவீன யுக்தியால் ஒழிக்க தேவை நிரந்தர தீர்வு**

ராஜபாளையம்:விவசாயத்திற்கு ஆதாரமாக உள்ள கண்மாய்களில் வளரும் ஆகாயதாமரை செடிகளை அகற்றவும், இப்பிரச்னை தொடராமல் இருக்க நவீன யுக்தியை கையாண்டு நிரந்தர தீர்வுக்கு வழி ஏற்படுத்த வேண்டும். மழைநீரை கண்மாய், ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளில் தேக்கி விவசாயத்திற்கு பயன்படுத்தி வந்தனர். இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் இருந்தது. நீர்மட்டம் குறையாததால் கிணற்றுப் பாசனமும் விவசாயிகளுக்கு கை கொடுத்தது. தற்போது கண்மாய்களின் இலக்கணமே மாறிவிட்டது. இரண்டு போகம், மூன்று போகம் என பயன்பட்ட கண்மாய்கள் ஒரு போகத்திற்கு மட்டுமே பயன்படுகின்றன. அந்த அளவிற்கு கண்மாய்களில் தண்ணீர் தேங்குவதில்லை. மழைநீர் வீணாகி வெளியேறுகிறது.

கொசுக்களுக்கு வாய்ப்பு:வீணாகும் மழைநீர் குடியிருப்புகள், காலி இடங்களில் தேங்குகின்றன. கொசு உற்பத்தியும் அதிகமாகிறது. கொசு உற்பத்தியை கட்டுப்படுத்த நடவடிக்கையில் இறங்கும் உள்ளாட்சி அமைப்புகள் கண்மாய் பராமரிப்பை கண்டுகொள்வதில்லை. கடந்த சில ஆண்டுகளாக கண்மாய்களில் மீன் வளர்ப்பதே பிரதான தொழிலாக உள்ளது. கண்மாயை பராமரிக்காத அரசு அமைப்புகள் மீன் வளர்ப்பதை ஊக்கப்படுத்தும் விதமாக, மீன்பாசி ஏலம் விடுகின்றனர். இதன் மூலம் கண்மாய் பராமரிக்கப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. அரசுக்கு சொந்தமான கண்மாய்களில் மீனை வளர்த்து தனிநபர், பல லட்சம் சம்பாதிக்கின்றனர். இதில் அரசுக்கு வரவேண்டிய வருமானம் மூடி மறைக்கப்படுகிறது.

பூச்சியியல் துறை :ரோடுகளை பராமரிக்க சாலை பணியாளர்கள் உள்ளனர். இது போல் கண்மாய்களை பராமரிக்கவும் தனிஅமைப்பை ஏற்படுத்தவேண்டும். இதற்காக தனிகுழுவை ஏற்படுத்தி வருவாய், பொதுப்பணித்துறை, விவசாயிகள், இயற்கை ஆர்வலர்களை நியமிக்கவேண்டும். கண்மாய்களில் வளரும் ஆகாயதாமரைகளை உடனே அகற்றுதல், மீண்டும் ஆகாயதாமரை வளராமல் தடுத்தல்

போன்ற பணிகளில் ஈடுபடவேண்டும். ஆகாயதாமரை வளர்வதை தடுக்கும்விதமாக பூச்சி, மீன் வளர்ப்பு போன்றவற்றை ஆராயவேண்டும். இதற்கு விவசாயத்துறை, பூச்சியியல் துறை உதவவேண்டும்.

விவசாயத்துறை:ராஜபாளையம் விவசாயி முருகேசன், "ஆகாயதாமரைகள் நீர்நிலைகளில் வளர்வதால் தண்ணீரின் அளவு குறைகிறது. விவசாயத்திற்கான ஆறுமாத தண்ணீர் தேவையை பூர்த்தி செய்த கண்மாய்கள் இருமாதத்திலே வற்றும் நிலை உள்ளது. இதற்கு முக்கிய காரணியாக ஆகாய தாமரை உள்ளது. இதன் வளர்ச்சி குறுகிய காலத்தில் பன்மடங்காக உள்ளது. அதற்கேற்றவாறு அரசு செயல்பாடுகள் இல்லை. இதை கட்டுப்படுத்த விவசாயத்துறை உட்பட அரசு அமைப்புகள் நிரந்தர தீர்வு காணவேண்டும், " என்றார்.

## தாணிப்பாறை ஆற்றில் தடுப்பணைகள் "தினமலர்' செய்தியால் அதிகாரிகள் குழு ஆய்வு

வத்திராயிருப்பு:"தினமலர் 'நாளிதழ் செய்தி எதிரொலியாக தாணிப்பாறை ஆற்றில் 5 இடங்களில் புதிய தடுப்பணை கட்ட அதிகாரிகள் குழுவினர் ,நேற்று ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டனர்.

சதுரகிரி மலையில் உற்பத்தியாகி பல்வேறு ஓடைகளின் வழியாக அடிவாரத்திற்கு வரும் நீர், அங்கு ஒன்றுசேர்ந்து தாணிப்பாறையில் அருவியாக வந்து விழுகிறது. இதன்பின் ஆறுவழியே செல்லும் நீர் ஆயர்குளம், மாத்தூர்குளம், ஆலங்குளம் கண்மாய் என அடுத்தடுத்த கண்மாய்களுக்கும் செல்கிறது. மழைக்காலங்களில் இந்த ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால் ஆற்றின் கரைகள் அரிக்கப்பட்டு அதையொட்டிய வயல், தோப்புகளில் உள்ள மரங்கள் வேரோடு நீரில் இழுத்துச் செல்லப்படுகிறது. ஒவ்வொரு முறை வெள்ளப்பெருக்கு ஏற்படும்போதும் விவசாயிகள் பெருத்த இழப்புகளை சந்தித்து வந்தனர்.

4 அடி உயரம்

இதை தடுப்பதற்காக ஆற்றின் இரு இடங்களில் 4 அடி உயரத்தில் சிறு தடுப்பணைகள் கட்டப்பட்டது. இதன்மூலம் விவசாயிகளுக்கு

எதிர்பார்த்ததைவிட அதிக பலன் கிடைத்தது. தடுப்பணையில் நீர் தேங்கி சென்றதால் நீரின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டு கரைகள் அரிப்பும், சேதமும் தடுக்கப்பட்டது. மணல் திருட்டுக்கும் வழியின்றி போனது. கிணறுகளிலும் நீர்கசிவு ஏற்பட்டு வறட்சிகாலத்திலும் கிணறுகளுக்கு நீர்ஊற்று கிடைத்தது. 200 ஏக்கர் நிலங்களும் பாதிப்பிலிருந்து தப்பின.

கலெக்டர் ராஜாராமன் :இதேபோல ஆற்றில் மேலும் பல தடுப்பணைகள் கட்டினால் கோடை காலத்திலும் பாசனவசதி பெறும் என விவசாயிகள் அரசுக்கு கோரினர். இது தொடர்பாக ஜன.,27 ல் "தினமலர்' நாளிதழில் படத்துடன் செய்தி வெளியானது. கலெக்டர் ராஜாராமன் தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இதை தொடர்ந்து நேற்று வேளாண்மைத்துறை இணை இயக்குனர் கனகராஜ், வேளாண்மை பொறியியல்துறை மாவட்ட செயற்பொறியாளர் ஆறுமுகநயினார், உதவி செயற்பொறியாளர் வைத்தியநாதன் ஆகியோர் அடங்கிய குழுவினர் விவசாயிகளுடன் தாணிப்பாறை ஆற்றில் ஆய்வுப்பணியில் ஈடுபட்டனர்.

"தினமலர் 'செய்தி :அவர்கள் கூறுகையில், "இங்கு தடுப்பணை தேவை என்பதை "தினமலர் 'செய்தியின் மூலமாக தெரிந்து கொண்டோம். அச்செய்தியை கலெக்டர் ராஜாராமன் "வாட்ஸ்ஆப்' மூலம் அனுப்பி, ஆய்வுப்பணிகளை துவக்கவும், விவசாயிகளின் கருத்துக்களை கேட்கவும் கூறினார். அதன்படி ஆய்வுப்பணிக்கு வந்துள்ளோம்.

மத்திய அரசின் பி.எம்.கே.எஸ், திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் மூலம் 5 இடங்களில் தடுப்பணைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. தடுப்பணைகள் கட்டப்பட்டால் ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்,' என்றனர். தாணிப்பாறை பாசன விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஸ்ரீராமுலு, குமரேசன், அழகர்சாமி, மனோகரன் உடனிருந்தனர்.

## தூர்வாரும் பணிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்க மேட்டூர் அணையில் பொதுத் துறை நிறுவனத்தினர் ஆய்வு

மேட்டூர் அணையைத் தூர்வாருவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக பொதுத் துறை நிறுவனத்தினர் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

மேட்டூர் அணை கட்டப்பட்டு 82 ஆண்டுகளாகின்றன. மழை, வெள்ளம் காரணமாக மேட்டூர் நீர்த்தேக்கத்தில் வண்டல் மண், மணல் தேங்கியுள்ளதால், அணையில் முழுக் கொள்ளளவு நீரைச் சேமிக்க முடியவில்லை.

இதேபோல, தமிழகத்தில் வைகை, பேச்சிப்பாறை, அமராவதி, ஸ்ரீவைகுண்டம் உள்ளிட்ட அணைகளிலும் வண்டல் மண் தேங்கியுள்ளதால், அணையில் முழுக் கொள்ளளவு தண்ணீரைச் சேமிக்க முடியவில்லை. இந்த அணைகளைத் தூர்வாரும் பொறுப்பு மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வாப்கோஸ் என்ற பொதுத் துறை நிறுவனத்திடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர் டி.வி.எஸ்.மூர்த்தி, துணைத் தலைமைப் பொறியாளர் ஆர்.கிருஷ்ணன், சுற்றுச்சூழல் ஆலோசகர்கள் சதீஷ், உமாசங்கர், அருண்குமார் ஆகியோர் அடங்கிய குழுவினர் வெள்ளிக்கிழமை மேட்டூர் அணையின் நீர்த்தேக்கப் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, தூர்வாரும்போது கிடைக்கும் மணல், வண்டல் ஆகியவற்றைச் சேமிப்பதற்கான இடம், மண்ணின் தன்மை ஆகியவை குறித்து ஆய்வு செய்தனர். மேட்டூர் அணையில் இருந்து 5, 25, 30-ஆவது கி.மீ. பகுதிகளில் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இதுகுறித்து வாப்கோஸ் நிறுவனத்தின் தலைமைப் பொறியாளர் எஸ்.மூர்த்திகூறியதாவது:

மேட்டூர் அணை நீர்த்தேக்கப் பகுதிகளில் வண்டல் மண், மணல் படிந்து முழுக் கொள்ளளவு தண்ணீரைச் சேமிக்க முடிவில்லை. நீர்த்தேக்கப் பகுதியில் எவ்வளவு மணல் தேங்கியுள்ளது, அதை எவ்வாறு அகற்றி முழுக் கொள்ளளவு தண்ணீரைச் சேமிப்பது என்பது குறித்து திட்ட மதிப்பீடு தயாரிக்க ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

பல பகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டு மூன்று அல்லது நான்கு

மாதங்களில் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதன் பிறகு, பணிகள் தொடங்கும்என்றார்.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கால்நடை மருத்துவ இடங்கள் 100-ஆக உயர்த்தப்படும்: மத்திய கால்நடை பராமரிப்பு ஆணையர் தகவல்



கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை இடங்களை 60-லிருந்து 100-ஆக உயர்த்த இந்தியக் கால்நடை மருத்துவக் கழகம் திட்டமிட்டுள்ளதாக மத்திய கால்நடைப் பராமரிப்பு ஆணையர் எஸ். சுரேஷ்ஹோன்னப்பகோல்கூறினார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் 18-ஆவது பட்டமளிப்பு விழா வேப்பேரியில் உள்ள சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு பல்கலைக்கழக வேந்தரும், தமிழக ஆளுநருமான கே.ரோசய்யா தலைமை வகித்து, 513 பேருக்கு பட்டங்களையும், 41 பேருக்குபதக்கங்களையும்வழங்கினார்.

இதில், சுரேஷ் ஹோன்னப்பகோல் பேசியது:
நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒருவர் முற்றிலும் ஏமையாகவும், இரண்டில் ஒரு குழந்தை ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்களாகவும் இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையை மாற்ற உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு இணையாக ஊட்டச்சத்து குறைபாடும் மிகுந்த கவனத்தைப் பெற்றுள்ளது.
உலக அளவில் மனித இனத்துக்கு 26 சதவீத புரதமும், 13 சதவீத எரிசக்தியும் கால்நடைகளிலிருந்து கிடைக்கிறது. பெருகி வரும் வருவாய், நகரமயமாக்கலுக்கு ஏற்ப கால்நடை புரதத்துக்கான தேவை 2050-இல் 50 சதவீதம் அளவுக்கு அதிகரிக்க வேண்டியிருக்கிறது. இதற்காக வேளாண்மை உள்ளடக்கிய துறைகளில் கால்நடை துறை வேகமாக வளரக்கூடிய துறையாக இருக்கிறது. ஆனால், கால்நடைத் துறை வளர்ச்சிக்கு மிகுந்த நிபுணத்துவமும், தகுதியும் வாய்ந்த மனித ஆற்றல் தேவைப்படுகிறது.

மனித ஆற்றலை உயர்த்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை இந்திய கால்நடை மருத்துவக் கழகம் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை இடங்களை 60-லிருந்து 100-ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதுஎன்றார்.

விழாவில் இணைவேந்தரும், தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருமான டி.கே.எம். சின்னையா, துணைவேந்தர் திலகர் உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர். கால்நடை மருத்துவப் படிப்பில்
31 பதக்கங்களை பெற்ற மாணவி
விழாவில் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்ற, மாணவி சி.லாவண்யாவுக்கு 31 பதக்கங்கள் வழங்கப்பட்டன. சேலம் மாவட்டம், மேட்டூரைச் சேர்ந்த இவர் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஐந்தாண்டு இளநிலை கால்நடை மருத்துவ அறிவியல் படிப்பை (பி.வி.எஸ்சி.-ஏ.ஹெச்) படிப்பை மேற்கொண்டார். பட்டம் பெற்ற 203

பி.வி.எஸ்சி.-ஏ.ஹெச். பட்டதாரிகளில் மிக அதிக பதக்கங்களை வென்ற முதல் மாணவி என்ற பெருமையை பெற்றுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

சிறு வயது ஆசை நிறைவேறியுள்ளது. 5 வயதிலேயே தந்தை இறந்துவிட்டார். அரசுப் பள்ளி ஆசிரியையான தாய் ராதா கஷ்டப்பட்டு வளர்த்தார். எம்.பி.பி.எஸ். படிக்க வைப்பதுதான் ஆசையாக இருந்தது. இருப்பினும், கால்நடை மருத்துவப் படிப்பு என்ற லட்சியத்தை நிறைவேற்ற இதில் சேர்ந்தேன். அனேக பாடங்களில் பல்கலைக்கழக அளவில் முதல் மதிப்பெண் பெற்று 9 தங்கப் பதக்கம், 22 வெள்ளிப் பதக்கம், ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பரிசு ஆகியவற்றை வென்றிருப்பது மிகவும் பெருமையாக உள்ளது. பல்கலைக்கழக அளவில் முதல் 5 இடங்களில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு, கால்நடை மருத்துவக் கல்லூரியிலேயே பணி வாய்ப்பு (பட்டதாரி உதவியாளர்) அளிக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் அரசுப் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறேன்.

அடுத்த ஆண்டு பகுதி நேர முதுநிலை பட்டப் படிப்பில் சேர்ந்து, ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்வேன். கல்லூரிப் பேராசிரியராக பணியாற்றவே விரும்புகிறேன் என்றார்.

இவருக்கு அடுத்தபடியாக, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த கே. காயத்ரி 4 பதக்கங்களை பெற்று இரண்டாமிடம் பிடித்துள்ளார்.

## சீரற்ற வானிலையால் முட்டை உற்பத்தி குறைய வாய்ப்பு

சீரற்ற வானிலையால் முட்டை உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது என நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கல்லூரியின் வானிலை ஆலோசனை மையம் வெளியிட்ட செய்தி: அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடனும், மழையற்றும் காணப்படும். பகல் வெப்பம் உயர்ந்தும், இரவு வெப்பம் சற்றே குறைந்தும் இருக்கும்.

இதனால் பகலில் உயர்ந்துவரும் வெப்பத்தையும், இரவில் குளிருக்குமான வானிலையைத் தாங்க வேண்டி வரும். இது கோழிகளில் ஒருவிதமான அயற்சியை உண்டாக்கி, அதன் காரணமாக தீவன எடுப்பையும் முட்டை உற்பத்தியையும் சற்றே குறையச் செய்யும்.

ஆகவே, இக்காலகட்டத்தில் தீவனத்தின் ஊட்டச்சத்துக்கள் அயற்சியைத் தாங்கக்கூடிய நன்கு ஜீரணிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். பூஞ்சையற்ற மண் மற்றும் மணல் இல்லாத, ஈரம் குறைந்த தெளிவான மூலப்பொருள்களைக் கொண்டு தீவனம் தயாரிக்க வேண்டும்.

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகளில் பெரும்பாலும் வெள்ளைக்கழிச்சல் நோய் மற்றும் இறக்கை அழுகல் நோயினால் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்பட்டது தெரிய வந்துள்ளது. ஆகவே, பண்ணையாளர்கள் அதற்கேற்ப உயிர்பாதுகாப்பு முறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பருத்தி உற்பத்தியாளர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம்

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பருத்தி உற்பத்தியாளர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் வா.சம்பத் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் ஆட்சியர் பேசியது:

இந்திய ஜவுளி, துணி நூல் அமைச்சகத்தின் அறிவிப்பில், பருத்தி உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் பொருட்டும், குறைந்தபட்ச ஆதரவு விலை திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளனர்.

அதனடிப்படையில் சேலம் மாவட்டத்தில் உள்ள பருத்தி உற்பத்தியாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கவும், வட்டார ஒன்றிய அலுவலகம், விவசாய ஒழுங்குமுறை கூடம், பஞ்சாயத்து அலுவலகத்தில் விளம்பரம் மூலம் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கொள்முதல் செய்யப்படும் பருத்திக்கு தொகையை பருத்தி உற்பத்தியாளர்களுக்கு நேரடியாக வங்கிக் கணக்கில்

செலுத்தவும், பருத்தி ஏற்றுமதி செய்யத் தடை இல்லாததால் பருத்தி ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இத் திட்டத்தின் மூலம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு, குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டத்தைச் செயல்படுத்த ஏதுவாக அமையும் என்றார்.

இக் கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குநர் டி.பரணி, ஒழுங்குமுறை விற்பனைக் கூட மேலாண்மை இயக்குநர்கள் ஜெ.ஏ.ராஜநந்தினி, வி.தர்மலிங்கம், டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியின் உதவி இயக்குநர் டி.ரவிபிரவீன், நெசவாளர் சேவை மையத்தின் உதவி இயக்குநர் சந்தோஷ்குமார், கைத்தறி மற்றும் துணிநூல் துறை, துணி நூல் கட்டுப்பாட்டு அலுவலர் ப.மாதேஸ்வரன் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## கோவை வர்த்தக மையத்தில் ரூ.3 கோடியே 36 லட்சத்துக்கு தேயிலைத்தூள் ஏலம்



கோவை,

கோவை வர்த்தக மையத்தில், ரூ.3 கோடியே 36 லட்சத்துக்கு தேயிலைத்தூள் ஏலம் போனது.

<u>கோவை வர்த்தக மையம்</u>

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் வாரந்தோறும் இணையதளம் மூலம் தேயிலைத்தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஏலதாரர்கள் தேயிலைத்தூள் ரகங்களை ஏலத்தில் எடுத்து வருகிறார்கள். இதன்படி நடைபெற்ற 5–வது ஏலத்தின் விவரம் வருமாறு:–

<u>தேயிலைத்தூள் ஏலம்</u>

இதில் 2 லட்சத்து 20 ஆயிரத்து 307 கிலோ தேயிலைத்தூள் ஏலத்துக்கு வந்தது. அதில் 2 லட்சத்து 6 ஆயிரத்து 87 கிலோ தேயிலைத்தூள் ஏலம் போனது. இது 94 சதவீதம் ஆகும். இதன் ஏல மதிப்பு ரூ.2 கோடியே 20 லட்சத்து 36 ஆயிரத்து 882 ஆகும்.

இதில் 14 ஆயிரத்து 220 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ தேயிலைத்தூளின் சராசரி ஏல மதிப்பு 106 ரூபாய் 93 காசு ஆகும். இது கடந்த வாரம் 102 ரூபாய் 84 காசாக இருந்தது. இதன்மூலம் கிலோவுக்கு 4 ரூபாய் 9 காசு விலை அதிகரித்து உள்ளது.

<u>இலைரக தேயிலை</u>

இலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 26 ஆயிரத்து 800 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 18 ஆயிரத்து 686 கிலோ ஏலம் போனது. இது 94 சதவீதம் ஆகும். இதன் மொத்த விற்பனை மதிப்பு ரூ.1 கோடியே 15 லட்சத்து 70 ஆயிரத்து 698 ஆகும். ஒரு கிலோ இலைரக தேயிலையின் சராசரி ஏல மதிப்பு 97 ரூபாய் 49 காசு ஆகும். இது கடந்த வாரம் 95 ரூபாய் 95 காசாக இருந்தது. 1 ரூபாய் 54 காசு விலை அதிகரித்து உள்ளது.

<u>மொத்த விற்பனை</u>

இந்த ஏலத்தில் 3 லட்சத்து 24 ஆயிரத்து 773 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலைரக தேயிலை விற்பனையாகி உள்ளது. 22 ஆயிரத்து 334 கிலோ தேக்கம் அடைந்துள்ளது. இந்த ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.3 கோடியே 36 லட்சத்து 7 ஆயிரத்து 580 ஆகும்.

இந்த தகவலை கோவை தேயிலை விற்பனை மைய (போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்து உள்ளார்.

**பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் கலெக்டர் சுரேஷ்குமார் தகவல்**



கம்மாபுரம் அருகே கனமழையால் விளைநிலங்கள் மண்மேடானது. இதில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று கலெக்டர்சுரேஷ்குமார்கூறினார்.

மழையால்பாதிப்பு

கம்மாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட கொம்பாடிக்குப்பம், ஊ.மங்கலம், ஊ.அகரம், கொளப்பாக்கம் பகுதியில் என்.எல்.சி. 2-வது சுரங்கம் அமைந்துள்ளது. இந்த சுரங்கத்தையொட்டியுள்ள பகுதியில் நெல், கரும்பு, வாழை, உளுந்து உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

ஆண்டுதோறும் பருவமழையின்போது சுரங்கத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டு குவித்து வைக்கப்பட்டுள்ள மண் விளை நிலங்களை மூடிவிடுவதும், பின்னர் அதனை சரிசெய்து விவசாயிகள் சாகுபடி

செய்வதும் வாடிக்கையாகிவிட்டது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

மண்மேடானவிளைநிலங்கள்

இந்த நிலையில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு பெய்த கனமழையால் என்.எல்.சி. 2-வது சுரங்க பகுதியில் மண் அரிப்பு ஏற்பட்டு, அப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த நெல் உள்ளிட்ட பயிர்களை மூழ்கடித்தது. இதனால் 250 ஹெக்டேர் விளைநிலங்கள் மண்மேடாக மாறிவிட்டது. சுமார் 5 அடி முதல் 7 அடி உயரம் வரை மண் மேடாகி விட்டதால், அந்த நிலத்தை செம்மைப்படுத்த முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் கடலூர் மாவட்ட கலெக்டரிடம் முறையிட்டனர். இதையடுத்து கலெக்டர் சுரேஷ்குமார், என்.எல்.சி. சுரங்க மண்ணால் மேடான விளைநிலங்களை நேரில் வந்து பார்வையிட்டார். அப்போது விவசாயி ஒருவர், என்.எல்.சி சுரங்க மண் விளைநிலத்தை எந்த அளவுக்கு மூடியுள்ளது என்பதை, குழி தோண்டி அதில்இறங்கிகாண்பித்தார்.நிவாரணம்வழங்கப்படும்

பின்னர் கலெக்டர் சுரேஷ்குமார் விவசாயிகளிடம் கூறுகையில், வரும் காலங்களில் விவசாய நிலங்களை மண் மூடாமல் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் என்.எல்.சி. மற்றும் மாநில அரசு மூலம் நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்என்றார்.

அப்போது அவருடன், விருத்தாசலம் கோட்டாட்சியர் செந்தில்குமார், தாசில்தார் முரளி, ஒன்றியக்குழு துணை தலைவர் கனகசிகாமணி, வேளாண்மை உதவி இயக்குனர் சம்பத்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் சாந்திசுந்தரபாண்டியன், மதிவாணன் மற்றும் வருவாய் துறையினர், வேளாண்மை பொறியியல் துறை, என்.எல்.சி. அதிகாரிகள் உடனிருந்தனர்.

## 9 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கலெக்டர் தகவல்




கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 9 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்தொடங்கப்படஉள்ளது.

இது தொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் கதிரவன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

நெல்கொள்முதல்நிலையங்கள்

தமிழக முதல்-அமைச்சர் அறிவிப்பு படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கம் மூலம் காவேரிப்பட்டணம், மலையாண்டஅள்ளி, பாரூர் என 3 இடங்களிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலமாக பெரியமுத்தூர், மாதேப்பட்டி, பையூர், நெடுங்கல், போச்சம்பள்ளி, கால்வேஅள்ளி என 6 இடங்களிலும் என மொத்தம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 9 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படஉள்ளது.

மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நெல் விற்பனை செய்ய தமிழக முதல்-அமைச்சர் அறிவிப்பு படி நேரடி நெல் கொள்முதல் விற்பனை செய்து விவசாயிகள் பயன் பெறலாம். இந்த மையங்களில் விற்பனை செய்யும் ஏ கிரேடு குவிண்டாலுக்கு ஏற்கனவே ரூ.1,450 இருந்ததை தற்போது ரூ.70 கூடுதல் விலையில் குவிண்டாலுக்கு ரூ.1,520 என்ற விலையிலும், நெல் (பொது ரகம்) ஏற்கனவே ரூ.1,410 இருந்ததை தற்போது ரூ.50 கூடுதல் விலையில் குவிண்டாலுக்கு ரூ.1,460 என்ற விலையில் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

பயன்பெறலாம்

நீண்ட தூரம் சென்று விற்பனை செய்யும் நிலை மாறி தற்போது நமது மாவட்டத்திலேயே நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளது. விவசாயிகள் நெல் ரகங்களை விற்பனை செய்து பயன் பெறலாம். இவ்வாறு அதில் கலெக்டர் கதிரவன் தெரிவித்துள்ளார்.

**நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 5,200 மூட்டை பருத்தி ரூ.1 கோடிக்கு ஏலம்**



நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 5 ஆயிரத்து 200 மூட்டை பருத்தி ரூ.1கோடிக்குஏலம்போனது.

பருத்திஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு, துணை தலைவர் நல்லதம்பி மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம்நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 5 ஆயிரத்து 200 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

ரூ.1கோடிக்குவிற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.1 கோடிக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 641 முதல் ரூ.5 ஆயிரத்து 192 வரையிலும், டி.சி.எச் ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 876 முதல் ரூ.6 ஆயிரத்து 469 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 843 முதல் ரூ.5 ஆயிரத்து 297 வரையிலும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

**சிறுதானியங்களை பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் மாநில திட்ட குழு துணை தலைவர் தகவல்**



விஸ்வநாதபுரத்தில் நடந்த வயல்தின விழாவில் பயனாளி ஒருவருக்கு குதிரை வாலி விதைகளை மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்தஷீலா நாயர் வழங்கியபோது எடுத்தபடம்.

திருவாரூர் மாவட்டத்தில் சிறுதானியங்களை பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்தஷீலாநாயர்கூறினார்.

சிறுதானியபயிர்கள்

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் விஸ்வநாதபுரம் கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் இணைந்து சிறுதானிய பயிர்களை சாகுபடி செய்தல் மற்றும் சிறுதானியங்களை மதிப்புக்கூட்டல் தொடர்பான திட்டத்தினை விளக்கும் விதமாக வயல் தினவிழா நடந்தது.

விழாவுக்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார். இதில் மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்தஷீலா நாயர் கலந்து கொண்டு பேசினார்.

அப்போதுஅவர்பேசியதாவது:-

அதிகலாபம்

மாநில திட்டக்குழுவின் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியில் இருந்து

சிறுதானிய பயிர்களை சாகுபடி செய்தல் மற்றும் சிறுதானியங்களை மதிப்புக்கூட்டல் தொடர்பான திட்டத்தினை திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி வட்டாரத்தில் செயல்படுத்திட ரூ.16 லட்சத்து 15 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் குதிரைவாலி சிறுதானியத்தினை உற்பத்தி செய்வதற்கு 20 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 20 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக 12 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

குதிரை வாலியானது வறட்சியை தாங்கி வளரும் பயிராகும். இதனை உற்பத்தி செய்வதற்கு குறைவான தண்ணீரே போதுமானதாகும் அதே நேரத்தில் தண்ணீர் தேங்கியிருந்தாலும் விளைச்சல் பாதிப்படையாமல் வளரும் பயிராகும். எனவே சிறுதானியங்களை பயிரிட்டு விவசாயிகள் அதிகலாபம்பெறலாம்.

முக்கியமாக பெண்கள் விவசாயத்தில் முழுமையாக ஈடுபட வேண்டும். ஆகவே விவசாயிகள் நெல் மட்டும் என்பதை மாற்றி சிறு தானியங்களையும் பயிர் செய்து பயன்பெற வேண்டும். சிறுதானியங்களை உணவில் சேர்ப்பதால் பள்ளி குழந்தைகளின் அறிவு திறன்வளர்ச்சிஅடையும். இவ்வாறுஅவர்கூறினார்.

குறுந்தகடுகள்

அதனை தொடர்ந்து வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனைதுறை மூலம் வெளியிடப்பட்ட சிறுதானிய உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் குழந்தைகளிடையே சிறுதானியங்களின் முக்கியத்துவத்தை பிரபலப்படுத்துதல் தொடர்பான குறுந்தகடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இதில் மாநில வேளாண்மை திட்டக்குழு தலைவர் ஜெகன்மோகன், மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் மயில்வாகனன், திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன், வேளாண்மை துணை இயக்குனர் மதியழகன், மாவட்ட கலெக்டரின் நேர்முக

உதவியாளர் (வேளாண்மை) பெரியகருப்பன், வேளாண்மை உதவி இயக்குனா அசோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**அலங்கியம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மக்காச்சோளம் ரூ.1437–க்கு ஏலம்**



தாராபுரம் அருகே அலங்கியத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மக்காச்சோளம் ஏலம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று விவசாயிகளிடம் இருந்து 75 குவிண்டால் மக்காச்சோளம் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்னர் அதற்கான ஏலம் நடைபெற்றது. அதில் ஒரு குவிண்டால் மக்காச்சோளம் ரூ.1,437–க்கு ஏலம் போனது. இந்த ஏலத்தில் தாராபுரம், பழனி, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கலந்துகொண்டனர்.